
# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ள பணியும் பங்களிப்பும் !





துறைமுக அபிவிருத்தி
புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பார்வைக்கு........

- 1990 ஒக்டோபரில் வடக்கிலிருந்து துரத்தியடிக்கப் பட்ட 82, 867 முஸ்லிம்களின் வாழ்வில் 1994 ஆகஸ்டில் பதவிக்கு வந்த பொது ஜன முன்னணி அரசாங்கமும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சும் நம்பிக்கை தரும் மிகப் பெரும் மறு வாழ்வையும் பணியையும் செய்துள்ளது.

- இந்தப் பணிகளை காரிய சித்தமாக்க பல்லாயிரம் இலட்சம் ரூபாக்களை வடக்கு முஸ்லிம்களுக்காக 1999 இறுதி வரை செலவிட்டுள்ளது.

- 9, 082 குடும்பங்களின் அகதி முகாம் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து தங்களுக்கென்ற சொந்தமான வீடுகளைப் பெற்று சொந்தக் காணிகளில் மீள் குடியேற (RELOCATION) வழியமைத்துள்ளது.

- வடக்கில் திரட்சியாகவிருந்த கிராம, ஊர் அமைப்புகளை சிதையாது பாதுகாத்து, மாதிரிக் கிராமங்களை அமைத்து இம் மக்களின் சமுகக் கட்டமைப்பை பாதுகாத்துள்ளது.

- நிராதரவாக நின்ற வடக்கு முஸ்லிம்களின் இளம் மாணவ சமுதாயத்தை – கல்வி என்னும் பெரும் செல்வத்தின் பால் நிலை நிறுத்தி வைக்க, பல நூறு இலட்சங்களைச் செலவிட்டு பாடசாலைகள், கட்டிட வசதிகள், பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி கற்க வசதியற்ற நலிந்த மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியைத் தொடர மாதாந்த சகாய நிதி அளித்துள்ளது.

- பல்லாயிரம் இலட்சம் ரூபாக்களைச் செலவிட்டு இம்மக்கள் வாழும் பிரதேசங்களில் பாதைகள், மின்சார வசதி, குடிநீர் வசதி, சிறுவர் பூங்காக்கள், பள்ளிவாசல்கள், பொது நிலையங்கள் அமைத்து – இம் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தியுள்ளது.

- திருமணம் முடித்த தம்பதிகளுக்கு சுயதொழில் உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

- வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு அமைச்சரவையின் விசேட அனுமதியின் பேரில் பல நூறு இலட்சம் ரூபாய்களை நஷ்டஈடாக வழங்கியுள்ளது.

கௌரவ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களின் அயராத முயற்சியின் விளைவாக இம்மக்களுக்கு கிடைத்த பெருமதிமிக்க இப்பணிகள் காலத்தால் நினைவு கூறத்தக்க மிகப்பெரும் பங்களிப்பாகும்.

(தரவுகள் விரிவான கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ள பணியும் பங்களிப்பும்!

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பயங்கரவாதிகளினால் ஆண்டாண்டு காலம் தங்கள் தாயகமாகயிருந்த வடக்கு மண்ணிலிருந்து ஒரு சில மணிநேரகால அவகாசத்துடன் உடுத்த உடையுடன் முதியோர், பெண்கள், சிறுவர் என பேதம் பாராது மனிதாபிமானமற்ற வகையில் வடக்கு வாழ் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு துரத்தியடிக்கப்பட்டனர். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இம்முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்ட வரலாறு 10ஆண்டுகளாக நீட்டப்பட்டு விட்டது.

அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிலவிய வரலாற்றில் மீளமுடியாத கறைகளுள் இச்சம்பவம் மிகப் பெரும் இடத்தை வகிக்கிறது. இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே ஒரு பிரதேசத்திலிருந்து முற்றுமுழுதாக ஒரு இனம் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு துடைத்தெறியப் பட்டது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயேயாகும்.

**வடக்கு முஸ்லிம்களின் மாவட்ட ரீதியான குடித்தொகை (1991)**

| மாவட்டம் | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த சனத்தொகை |
|---|---|---|
| மன்னார் | 8,200 | 44,936 |
| யாழ்ப்பாணம் | 4,000 | 23,071 |
| வவுனியா | 1,800 | 8,742 |
| முல்லைத்தீவு | 1,000 | 4,906 |
| கிளிநொச்சி | 240 | 1,212 |
| மொத்தம் | 15,240 | 82,867 |


(1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரத்திற்கமைய வருடாந்த சனத்தொகை வளர்ச்சியான 3%த்தை உள்ளடக்கிய கணிப்பு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990இல் வெளியேற்றப்பட்ட 82,867 முஸ்லிம்களும் வடக்குக்கு வெளியே தங்களது வாழ்விடங்களை தேட வேண்டி ஏற்பட்டது. இந்நிலைமையில் அதிகாரத்தில் அன்று இருந்த அரசாங்கம் என்ற வகையில் ஐதே.கட்சி இந்த மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான இருப்பிடம், உணவு, உடை, கல்வி, சுகாதாரம், பண்பாட்டுச் சூழல் போன்றவைகளை ஏற்படுத்தித் தந்திருக்க வேண்டியது அன்றைய அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அன்றைய ஐ.தே.கட்சி அரசாங்கம் இத்தார்மீக கடமையும் பொறுப்பிலிருந்தும் தவறிவிட்டது.

## வடமாகாணத்தில் முஸ்லிம்களின் பிரதான குடியிருப்புக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

__மன்னார் மாவட்டம்__

1. தலைமன்னார்
2. கரிசல்
3. புதுக் குடியிருப்பு
4. துள்ளுக் குடியிருப்பு
5. கீரி
6. எருக்கலம்பிட்டி
7. தாராபுரம்
8. மன்னார்
9. விடத்தல்தீவு
10. பெரிய மடு
11. மினுக்கன்
12. ஆண்டான்குளம்
13. உயிலம்குளம்
14. வட்டக் கண்டல்
15. நருல் புதுவெளி
16. அளவெக்கே
17. புத்திரகண்டான்
18. பூவரசன்குளம்
19. முருங்கன்
20. நாநாட்டான்
21. நொச்சுக்குளம்
22. மணற்குளம்
23. இலந்தைக் குளம்
24. பண்டாரவெளி
25. பூநொச்சிக்குளம்
26. சிறுக்குளம்
27. புதுவெளி
28. முசலி
29. கூலாங்குளம்
30. நாலாம் கட்டை
31. வெள்ளாங்குளம்
32. பிச்சவாணியன்குளம்
33. வேப்பன்குளம்
34. பொற்கேணி
35. வண்ணாகுளம்
36. அகத்தி முறிப்பு
37. தம்பட்ட முதலிகட்டு
38. சிலாபத்துறை
39. கொண்டச்சி
40. கரடிக்குழி
41. பாலைக்குழி
42. மறிச்சிக்கட்டி
43. காக்காயன்குளம்

__முல்லைத்தீவு மாவட்டம்__

1. முல்லைத்தீவு நகரம்
2. ஹிஜ்றாபுரம்
3. தண்ணீர் ஊற்று
4. நீராவிப்பிட்டி
5. முறிப்பு
6. முத்தையன் கட்டு

__கிளிநொச்சி மாவட்டம்__

1. பூநகரி
2. நாச்சிக்குடா
3. கிளிநொச்சி

__யாழ்ப்பாண மாவட்டம்__

1. யாழ்ப்பாண நகரம்
2. சோனகத்தெரு
3. வேலணை
4. சாவகச்சேரி
5. நெய்னா தீவு

__வவுனியா மாவட்டம்__

1. வவுனியா நகரம்
2. பட்டகாடு
3. வேப்பங்குளம்
4. புளியங்குளம்
5. சாளம்பைக்குளம்
6. சூடுவெந்தபுலவு
7. மாங்குளம்
8. சின்ன சிப்பிக்குளம்
9. ஆனை விழுந்தான்
10. பாவற்குளம்
11. ஆண்டிய புளியங்குளம்
12. மகரம்பைக்குளம்

வடக்கிலிருந்து மேற்கூறப்பட்ட பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், வடக்குக்கு வெளியே கேட்பாரற்று அகதிகளாய் அல்லல்பட்டு நின்றனர். அன்றைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட அகதிமுகாம்கள் மனிதர்கள் வாழ்வதற்கே லாயக்கற்று இருந்தன. திறந்த வெளிச் சிறைச்சாலைகளாகவும், போசாக்கான உணவோ, மருத்துவ வசதிகளோ - மலசல கூடங்களோ, குடிப்பதற்கு உகந்த நீரோ, இம்மக்களின் இளம் சிறார்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகளோ பௌதீக வளங்களோ இருக்கவில்லை.

இம்மக்களின் வாழ்க்கையில் மிகப் பெரும் துயரமிகுந்த நான்கு வருடங்களை ஓட்டியபின் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதவிக்கு வந்த மேன்மை தங்கிய **சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க**வின் அரசாங்கத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராகப் பதவியேற்ற கௌரவ அமைச்சர் **எம்.எச்.எம். அஷ்ரஃப்** அவர்களின் பெரும் முயற்சியினால் இம்மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கிய அடிப்படைப் பிரச்சினைகள் கணிசமான அளவு தீர்க்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராகப் பதவியேற்ற பின் கௌரவ அமைச்சர் **எம்.எச்.எம். அஷ்ரஃப்** அவர்கள் 1994ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தனது அமைச்சு அதிகாரிகளுடன் இம்மக்களின் குறைகளை நேரில் கண்டறிவதற்காக நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இப்பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இவ் அகதி முகாம்களில் நிலவிய சூழ்நிலைகளைக் கண்டறிந்த அமைச்சர் உடனடியாக திறந்த சிறைச்சாலை போலிருந்த அகதி முகாம்களை உடனடியாக பெண்கள், குழந்தைகள் வாழும் குடும்பச் சூழ்நிலைக்கு உகந்தவாறு மாற்றி 150 சதுர அடி கொண்டதும் சீமெந்து தரையிடப்பட்டதும், காற்றோட்ட வசதியுள்ளதும் மலசலகூட வசதி கொண்டதுமான வீடுகளை அமைக்க உத்தரவிட்டார். கௌரவ அமைச்சரின் பணிப்புரைக்கமைய உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

புது மீள்குடியேற்றங்கள் (RELOCATION), மாதிரிக் கிராமங்கள் (Model Villages), அரச ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு, இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகள், மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள், பாதைகள், மின்சார வசதி, பள்ளிவாசல்கள், மையத்து அடக்கஸ்தலங்கள், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், நீர்பாசன வசதி, திருமண ஊக்குவிப்பு கொடுப்பனவு, பிற சமூக நலத்திட்டங்கள் எனப் பலவகைப்பட்ட திட்டங்கள் இதனுள் அடங்கும். இத்திட்டங்களை செவ்வனே செய்து முடிப்பதற்காக பல்லாயிரம் லட்சம் ரூபாய்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இதுவரை செலவிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தின் போது இருந்த அகதிகளின் குடியிருப்புகளின் அவலம்

## புது மீள்குடியேற்றம் (RELOCATION)

புது மீள்குடியேற்றல் நோக்கில் 9082 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. கட்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு, புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு, வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவு, முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு, சிலாபப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரிய, பள்ளம, ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அநுராதபுர மாவட்டத்திலும் மீள்குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 9082 குடும்பங்கள், தனிநபர்களாக 45,000 நபர்களும் இதனால் வாழ்விடம் பெற்றுள்ளனர்.

இம் மீள்குடியேற்றத்தின் ஊடாக இம்மக்கள் தங்களுக்கென்ற சிறு நிலத்துண்டையும், வீட்டையும் பெற்று வடக்கில் இருந்த திரட்சியான கிராம, ஊர் அமைப்பையும் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது மீள்குடியேற்றக் கிராமங்கள் — புத்தளம் மாவட்டம்

## பிரதேச செயலகப் பிரிவு புத்தளம்

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| பொத்து வில்லு | 1.நாகவில்லு/ எருக்கலம்பிட்டி<br>2. றசூல் நகர் |
| பாலாவி | 3. மாளிகாபுரம்<br>4. செம்பாமடு<br>5. குருவிக்குளம்<br>6. ஹிஜ்ரத் நகர்<br>7. சாபி நகர்<br>8. பரீதாபாத் |
| றத்மல்யாய | 9. றத்மல்யாய I)<br>10. றத்மல்யாய II)<br>11. றத்மல்யாய III)<br>12. வை.எம்.எம்.ஏ |
| கல்லடி | 13. நெலும்வவ |
| தில்லையடி | 14. தில்லையடி D)<br>15. உமர்பாத் A)<br>16. தில்லையடி A1)<br>17. தில்லையடி B)<br>18. தில்லையடி E)<br>19. தில்லையடி (Garment) |
| புத்தளம் நகர் | 20. தனிப்பட்ட<br>21. நாகமடுச்சோலை |
| சேனை குடியிருப்பு | 22. நிந்தனி<br>23. முல்லை கிராமம் |
| வேப்பமடு | 24. ரகுமத்நகர் |
| மணல் குண்டு | 25. மதீனா நகர் |

## பிரதேச செயலாளர் பிரிவு கற்பிட்டி

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| உலுக்கப் பள்ளம் | 1.ஹுசைனியாபுரம் |
| குறிஞ்சி பிட்டி (தெற்கு) | 2. சம்மடிவாடி |
| குறிஞ்சி பிட்டி (வடக்கு) | 3. குறிஞ்சி. காலனி<br>4.கற்பிட்டி தனிப்பட்ட |
| ஆலன்குடா | 5. மதீனா நகர்<br>6. தாருஸ்ஸலாம்<br>7. அல்-ஹிஜ்றா<br>8. ஸறபியாபுரம் |
| முதலப்பள்ளி | 9. முதலப்பள்ளி |
| ஆண்டான் கேணி | 10. கல்முனைக்குடி<br>11.கல்முனைக்குடி பி.செ)<br>12. தையூப் நகர் |
| திகாலி தலுவல்ல | 13. இஸ்லாமாபாத் |
| நுரைச் சோலை | 14. மன்னார்மாவத்த)R<br>15. சஞ்ஜிதாவத்த) R<br>16. ஹாஜறாவத்த) R<br>17. முல்லையூர்) R<br>18. கற்பாலி A ) R<br>19. கற்பாலி B ) R D.S<br>20. குறவன்குடில் )<br>21.கொய்யாவாடி I) R (அறபாநகர்) )<br>22.கொய்யாவாடி II) R (அல்ஜின்னா )<br>23. அல்ஹிறா R<br>24. பூலச்சேனை R |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| கண்டக்குழி | 25. கண்டக்குழி தனிப்பட்ட |
| ஏத்தலை | 26. ஏத்தலை |
| பெரிய குடியிருப்பு | 27. பெரியகுடியிருப்பு |
| சின்னக் குடியிருப்பு | 28. சின்னகுடியிருப்பு |
| மந்தலக்குடா | 29. மந்தலகுடா |
| ஆனைவாசல் | 30. வெண்டீஸ்வத்த (S) |
| வன்னிமுன்டல் தனிப்பட்ட | 31. வன்னிமுன்டல் |
| உடுக்குடியிருப்பு | 32. சிங்கப்புர (S) |
| முசல்பிட்டி | 33. முசல்பிட்டி தனிப்பட்ட |
| காரம்ப வெல்பய சென்றர் | 34. - |
| பாலக்குடா W/C | 35. - |
| பள்ளியாவத்த W/C | 36. - |
| டச்பேய் W/C | 37. - |
| பானையடி W/C | 38. - |
| பள்ளிவாசல் துறை | 39. அல்ஹம்றா ) R<br>40. அஹமட் புரம்) R<br>41. டீசன்ட் கேம்) R D.S<br>42. தெம்பிலிவத்த) R<br>43. நியூ சப்றா) -<br>44. ஜின்னாகிராமம்) -<br>45. அல்ரகுமான்) - |
| மம்பூரி | 46. - |
| நாரக்கல்லி | - |

## புது மீள்குடியேற்றக் கிராமங்கள் புத்தளம் மாவட்டம்
## பிரதேச செயலாளர் பிரிவு
## வண்ணாத்தவில்லு

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| வட்டக் கந்தல் | 1.இஸ்மாயில்புரம்'A'<br>2.இஸ்மாயில்புரம்'B'<br>3.இஸ்மாயில்புரம்'C'<br>4.இஸ்மாயில்புரம்'D'<br>5.இஸ்மாயில்புரம்'E'<br>6. நூறு நகர்<br>7. முஜாஹிதீன்புரம்<br>8. நியூ சிட்னி<br>9. ஸலாமாபாத் |
| காரை தீவு | 10. காரைதீவு (மன்னார் கேம்)<br>11. இலவன் குளம்<br>12. பழைய இலவன் குளம்(S)<br>13. புதிய இலவன் குளம்<br>14. றால்மடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது மீள்குடியேற்றக் கிராமங்கள் — புத்தளம் மாவட்டம்

**பிரதேச செயலாளர் பிரிவு : சிலாபம்**

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| சாவறன | 1. சாவறன (M) |

## புது மீள்குடியேற்றக் கிராமங்கள் — புத்தளம் மாவட்டம்

**பிரதேச செயலாளர் பிரிவு : முந்தல்**

| கிராம சேவகர் பிரிவு | புது மீள்குடியேற்றக் கிராமம் |
|---|---|
| வட்டக் கந்தல் | 1. சமீராகம |
| காரைதீவு | 2. கொத்தன்தீவு<br>3. றகுமத் நகர் |
| புளிச்சாகுளம் | 4. புளிச்சாகுளம்<br>5. புளிச்சாகுளம் |
| புபுதுகம | 6. சிறிமாபுர |

**1995ம் ஆண்டிலிருந்து 1999ம் ஆண்டு கடைசிப் பகுதிவரை புது மீள் குடியேற்றம் செய்யப்பட்ட ஆண்டு ரீதியான குடும்பங்களின் விபரம்**

| ஆண்டு | புது மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1995 | 1335 |
| 1996 | 2528 |
| 1997 | 2471 |
| 1998 | 792 |
| 1999 | 1956 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புது மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்கள் ஆண்டு வாரியாக - 1995

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்கபுர-கல்பிட்டி | 31 |
| விருதோடை-புத்தளம் | 615 |
| றத்மல்யாய- புத்தளம் | 16 |
| தில்லையடி 'A' | 69 |
| தில்லையடி 'B' | 42 |
| தில்லையடி 'E' | 21 |
| நிந்தனி | 80 |
| காரைதீவு-இலவன்குளம் | 106 |

### புது மீள் குடியேற்றக் கிராமங்கள் - 1996

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உலுக்குப்பள்ளம் | 495 |
| ஆலன்குடா I | 86 |
| ஆலன்குடா II | 70 |
| டீஸன்ட் கேம் | 18 |
| அல்-ஹம்வா | 58 |
| முசலிபிட்டி | 65 |
| நுரைச்சோலை I | 75 |
| நுரைச்சோலை II | 58 |
| நுரைச்சோலை III | 80 |
| நுரைச்சோலை IV | 178 |
| வெறல்பிட்டி | 02 |
| இஸ்மாயில்புரம் | 30 |
| றத்மல்யாய | 100 |
| குருவிக்குளம் | 31 |
| வேப்பமடு | 182 |
| மதுரங்குளி | 60 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது மீள் குடியேற்றக் கிராமங்கள் - 1997

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அல்-ஹிறா - எத்தலை | 46 |
| அகமதியா புரம் | 39 |
| மன்னார் மாவத்தை | 23 |
| அல்-ஹிறா - ஆலன்குடா | 17 |
| சபியா புரம் | 13 |
| நுரைச்சோலை 'A' | 50 |
| நுரைச்சோலை 'B' | 64 |
| அன்டன்கேணி | 251 |
| ஹிஜ்ரத்புற (புத்தளம்) | 228 |
| மலஹுபுற (நொச்சியாகம) | 96 |
| சூபிநகர் | 18 |
| கொய்யாவாடி | 58 |
| சிறிமாபுர | 174 |
| ஆலன்குடா | 193 |
| பாலாவி (நாகவில்வத்த) | 50 |
| பாலாவி | 301 |
| றத்மல்யாய | 54 |

## புது மீள் குடியேற்றக் கிராமங்கள் - 1998

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆலன்குடா | 30 |
| ஆலன்குடா | 76 |
| புளிச்சகுளம் | 55 |
| பாலாவி (கல்கமுவ) | 150 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புது மீள் குடியேற்றக் கிராமங்கள் - 1999

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தில்லையடி | 129 |
| மண்டல்குடா | 220 |
| பள்ளிவாசல்துறை | 9 |
| கல்முனைக்குடி | 14 |
| அன்டன்கேணி | 31 |
| புளிச்சகுளம் | 149 |
| வேப்பமடு (அநுராதபுரம்) | 143 |
| முதலைப்பள்ளி | 83 |
| முகைதீன்புரம்'A' (அநுராதபுரம்) | 98 |
| முகைதீன்புரம்'B' (அநுராதபுரம்) | 97 |
| மணல் தோட்டம் | 124 |
| மாளிகாபுரம் II (அநுராதபுரம்) | 310 |
| பாலாவி - புத்தளம் | 184 |

### இப் புது மீள் குடியேற்றக் கிராமங்கள் அமைப்பதற்கான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செலவீடுகள்

| ஆண்டு | மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவு | | |
|---|---|---|---|---|
| | | தற்காலிகக் கூடாரம் | உபகரணம் வாங்க | மீள் குடியேற்ற கொடுப்பனவு |
| 1995 | 1335 | 9,345,000 | 1,335,000 | 2,670,000 |
| 1996 | 2528 | 17,696,000 | 2,528,000 | 5,116,000 |
| 1997 | 2471 | 17,297,000 | 2,471,000 | 4,942,000 |
| 1998 | 792 | 5,544,000 | 792,000 | 1,584,000 |
| 1999 | 1956 | 13,692,000 | 1,956,000 | 3,912,000 |
| மொத்தம் | 9082 | **63,574,000** | **9,082,000** | **18,224,000** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதன் பின் மாண்புமிகு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் வடக்கு முஸ்லிம்களுக்கான புது மீள் குடியேற்றக் கிராமங்கள் அமைப்பதற்கு இதுவரை தொலாயிரத்தி எட்டு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாவை **(90,880,000)** தனது அமைச்சின் ஊடாக செலவிட்டுள்ளார்.

இம்மக்கள் இன்று தங்களுக்கான 10 பேர்ச் காணியுடனும் சொந்த வீட்டுடனும் வாழ்வதற்கான உத்தரவாதமும் பாதுகாப்பும் இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தாம் விலைக்கு வாங்கிய காணிகள் அனைத்தும் புனர்வாழ்வு புனர்ரமைப்பு அமைச்சின் நிதியுதவி பங்களிப்பு செய்துள்ளது என்பது மிக முக்கியமானது. அத்துடன் நிரந்தர வீடுகளை கட்டிக்கொள்ளும் முகமாக புனர்வாழ்வு அதிகார சபையின்ஊடாக ரூபா இருபத்தி ஐயாயிரம் (25,000/=) வழங்கும் திட்டம் தொடர்ந்தும் நடை முறைப்படுத்தப்படுகிறது.

இதுவரை முந்தல் பிரதேசத்தில் சிறிமாப்புர வீடமைப்புத்திட்டம், பாலாவியில் மாளிகாபுரமும், ரத்மல்யாயவில் வை.எம்.எம்.ஏ. வீட்டுத்திட்டமும், ஹிஜ்ராபுர வீட்டுத்திட்டமும் நிரந்தர வீடுகளாக நிறுவப்பட்டுள்ளது.

## உலர் உணவு வினியோகம்

கௌரவ அமைச்சர் அவர்களின் முயற்சியினால் நிரந்தரமாக மீளக்குடியேறிய மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவுத்திட்டம் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் இம்முயற்சியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேறிய மக்களுக்கு தங்களது நாளாந்த உணவுத் தேவையின் பெருமளவு கஷ்டத்தை இல்லாதொழித் திருக்கிறது. இம்மக்களுக்கு இப் பணியானது ஒரு நிம்மதியான வாழ்விற்கு உரமூட்டும் செயற்பாடாகும்.

## மாதிரிக் கிராமங்கள் (Model Villages)

### புத்தளம் மாவட்டம்

புத்தளம் மாவட்டத்தில் ஹுஸைனியா புரம் (உலுக்காப் பள்ளம்) எருக்கலம்பிட்டி மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஹுஸைனியா புரம் - **541** குடும்பங்கள்
எருக்கலம் பிட்டி - **802** குடும்பங்கள்
மொத்தமாக - **1340** குடும்பங்கள் இதனால் நன்மை பெற்றுள்ளனர்.

எருக்கலம்பிட்டி மாதிரிக் கிராமம், ஹுசைனியாபுரம் மாதிரிக் கிராமம் ஆகியவற்றை அமைப்பதற்காக வேண்டி,
எருக்கலம்பிட்டி மாதிரிக் கிராமத்திற்கு
**8,440,958** ரூபாவும்,
ஹுசைனியாபுரம் மாதிரிக் கிராமத்திற்கு
**3,186,475** ரூபாவும்
மொத்தமாக நூற்றி பதினாறு லட்சத்தி இருபத்தி ஏழாயிரத்து நானூற்றி முப்பத்தி மூன்று ரூபா **(11,627,433/-)** செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை வசதிகள்

1990இல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள தங்கள் பிள்ளைகளுடைய கல்வியைத் தொடர முடியாது பெரும் இன்னல்களை எதிர் கொண்டனர். வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களுள் 17,000 பேர் பாடசாலைக் கல்வியைக் கற்கும் மாணவர்களாவர். வடக்கில் வாழும் போது கல்வியைச் சீராகக் கற்ற இவர்கள், வெளியேற்றப்பட்ட பின் அகதி வாழ்வில் கல்வி கற்பதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கினர். பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக கல்வியை கற்பதை நிறுத்திவிட்டு கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. பாடசாலை வசதிகள் இருக்கவில்லை. மாலை நேரப் பாடசாலை என்ற பெயரில் மூன்று மணிநேர பாடசாலை, உள்ளூர் பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் - அகதி மாணவர், பெற்றோர்களுக்கிடையிலான பௌதீகவளப் பிரச்சினைகள் போன்றவை எதிர் கொள்ளப்பட்டன.

இதனடிப்படையில் இடம்பெயர்ந்தோரில் 68 சதவீதமானவர்கள் புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்றனர். இடம்பெயர்ந்து இம்மாவட்டத்தில் வாழும் 53,000 பேரில் 99 சதவீதமானோர் முஸ்லிம்கள். இதனால் முஸ்லிம் பிரதேசங்களிலேயே இவர்களும் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கல்பிட்டி, புத்தளம், முந்தல், வனாத்தவில்லு பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் தான் செறிவாக வாழ்கின்றனர். ஏறக்குறைய 11,000 இடம்பெயர்ந்த மாணவர்கள் இந்த மாவட்டத்தில் வாழ்வதாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 1990 ஒக்டோபரில் புத்தள மாவட்ட மாணவர் தொகையில் திடீரென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட இந்த அதிகரிப்பு, அதாவது, ஏற்கனவே இருந்த மாணவர் தொகையில் 11,000 மாணவர்களின் புதிய அதிகரிப்பு, உள்ளூர் மாணவர்களுக்காக மட்டும் இயங்கி வந்த பாடசாலைகளில் பல புதிய பிரச்சினைகளை தோற்றுவித்தது, உண்மையைச் சொன்னால் இந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கு முன்னர் இந்தப் பாடசாலைகளினால் உள்ளூர் மாணவர்களின் தேவையைக் கூட சிறப்பாக பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்த நிலையில் ஏற்பட்ட இப்புதிய அகதி மாணவர்களின் வரவு சிக்கல்களை ஏற்படுத்தத் தவறவில்லை.

இடம்பெயர்வதற்கு முன் வடபுலத்தில் 50க்கும் அதிகமான முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்ற இந்த மாணவர்கள், 5க்கும் மேற்பட்ட 1 ஏ பி பாடசாலைகளில் உயர்கல்வி கற்ற இந்தச் சிறார்கள், வடக்கின் பிரபல தமிழ்ப் பாடசாலைகளில் கூட கல்வி கற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த இவர்களின் கல்வித் தாகத்தை தீர்க்கக்கூடிய நிலையில் புத்தளப் பிரதேச பாடசாலைகள் எந்த வகையிலும் இருக்கவில்லை.

இடம்பெயர்ந்து புத்தள மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் 95 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் புத்தளம் மாவட்டத்தின் தமிழ்மொழி மூல முஸ்லிம் பாடசாலைகளில்தான் கல்வி பயில்கின்றனர். இம்மாவட்டத்திலுள்ள 30 முஸ்லிம் பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மாணவர்கள் கணிசமான அளவில் கற்று வருகின்றனர். 20 பாடசாலைகளில் மொத்த மாணவர் தொகையில் 25 சதவீதத்திற்கும் அதிகமாகவும், 14 பாடசாலைகளில் 40 சதவீத்திற்கும் அதிகமாகவும், 6 பாடசாலைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமாகவும் இடம்பெயர்ந்த மாணவர்கள் இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஏற்பட்ட இடம்பெயர்ந்த மாணவர்களின் பெருந்தொகையான வருகையினால் புத்தள மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளே அதிகமாய்ப் பாதிக்கப்பட்டன.

அதிகரித்த இடம்பெயர்ந்த மாணவர் தொகையைச் சமாளிக்கும் வகையில் தமிழ் மொழிப் புத்தள மாவட்டப் பாடசாலைகளில் புதிய கட்டடங்களோ, தளபாடங்களோ, உபகரணங்களோ, ஆசிரியர் தொகையோ அதிகரிக்கவில்லை. இதனால் இடம்பெயர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாது உள்ளூர் மாணவர்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. ஆயினும் இடம்பெயர்ந்த மாணவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். ஒருசில பாடசாலைகளில் அதிக தொகையான மாணவர்கள் அனுமதி கோரிய போது இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அனுமதி வழங்குவதில் மேற்கூறப்பட்ட தடைகள் காணப்பட்டதால், பல இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலையும் இப்பிரதேசத்தில் காணப்பட்டது. இந்த நிலையால் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி எதிர்காலம் கேள்விக்குறியாய் இருந்தது.

அதிகரித்த மாணவர் தொகையைச் சமாளிக்க முடியாத சில பாடசாலைகள் மாலை வேளைப் பாடசாலைகளை ஆரம்பித்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும், வேறு நிறுவனங்களின் நிதியுதவியினால் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்றன. காலை வேளைப் பாடசாலைகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2.00 மணி வரை நடைபெற, மாலை வேளைப் பாடசாலைகள் மாலை 2.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் காலை வேளைப் பாடசாலைகளில் மாணவர்கள் ஏறக்குறைய 6 1/2 மணித்தியாலங்கள் கற்க, மாலை வேளைப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள், அதாவது, இடம்பெயர்ந்த மாணவர்கள் 3 மணித்தியாலங்களே பாடசாலைகளில் கற்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வியின்பால் மிகுந்த கரிசனை கொண்ட கௌரவ அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் எல்லாவற்றையும் இழந்த பெற்றோரின் இப் பிள்ளைகள் கல்வியையும் இழந்து விடக்கூடாது என்பதில் மிகவும் கரிசனையாக இருந்தார். உடனடியாக இம் மாணவர்களின் கல்வி எதிர் காலத்தில் ஒளிக்கீற்றை ஏற்படுத்தும் முகமாக புதிய பாடசாலைகளையும், பாடசாலைக் கட்டிடங்களையும், தளபாட, கழிப்பிட வசதிகளையும் கொண்ட திட்டத்தை உடனடியாக கௌரவ அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் மேற்கொண்டார்.

இதன் பயனாக மூன்று புதிய பாடசாலைகளும் 25 பாடசாலைகளுக்கு 34 வகுப்பறைக் கட்டடங்களையும், 7 சலக் கழிப்பிடங்கள், 8 மலக் கழிப்பிடங்களையும் கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அமைத்துக் கொடுத்திருக்கிறது. இதன் பெறுமானம் 320 இலச்சம் ரூபாவாகும். தளபாட வசதிகளுக்கும் மேலதிகமாக 50 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி எதிர்காலத்தில் எமது அமைச்சின் இப்பணி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பணியின் மூலம் இடம்பெயர்ந்த மாணவர்கள் சீரான கற்கை செயற்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புத்தளம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம் மாணவர்களின் கல்வித் தேவைக்காக 1996 ஒக்டோபர் 05ம் திகதி கௌரவ அமைச்சரினால் வைபவ ரீதியாக கையளித்து வைக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடங்கள், பாடசாலைகளின் விபரம்

| | பாடசாலை | கட்டிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | ஸாஹிறா தேசிய கல்லூரி<br>புத்தளம். | 1 |
| 02. | வெட்டாலை அ.மு.வி.<br>முள்ளிபுரம், புத்தளம். | 1 |
| 03. | மணல்குண்டு அ.மு.வி.<br>புத்தளம். | 1 |
| 04. | தில்லையடி அ.மு.வி.<br>புத்தளம். | 1 |
| 05. | பாலாவி அ.மு.வி.<br>புத்தளம். | 1 |
| 06. | கடயாமொட்டை அ.மு.ம.வி.<br>மதுரங்குளி. | 1 |
| 07. | கணமூலை அ.மு.வி.<br>மதுரங்குளி | 1 |
| 08. | அல்-மின்ஹாஜ் அ.மு.வி.<br>பெருக்குவெட்டான், கொத்தாந்தீவு. | 1 |
| 09. | உமர்பாறூக் அ.மு.ம.வி<br>புளிச்சாகுளம், பத்துலுஓயா. | 1 |
| 10. | நுரைச்சோலை அ.மு.ம.வி. | 1 |
| 11. | ஆலங்குடா அ.மு.வி.<br>ஏத்தாலை. | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12. | திகழி அ.மு.ம.வி. ஏத்தாலை. | 1 |
| 13. | முதலைப்பாளி அ.மு.வி. பள்ளிவாசல்துறை. | 1 |
| 14. | முசல்பிட்டி அ.மு.வி. பள்ளிவாசல்துறை. | 1 |
| 15. | பள்ளிவாசல்துறை அ.மு.வி. பள்ளிவாசல்துறை | 1 |
| 16. | குறிஞ்சிப்பிட்டி அ.மு.வி. | 1 |
| | பள்ளிவாசல்துறை. | 1 |
| 17. | கண்டல்குழி அ.மு.வி. கண்டல்குழி. | 1 |
| 18. | அல்-அக்ஸா ம.க. கல்பிட்டி | 1 |
| 19. | பாத்திமா மு.ம.ம.வி. புத்தளம். | 1 |
| 20. | வட்டக்கண்டல் அ.மு.ம.வி. இஸ்மாயில்புரம், புத்தளம் | 1 |
| 21. | இலவம் குளம் அ.மு.வி. | 1 |
| 22. | இலவம் குளம் அ.சி.வி | 1 |
| | **புதிய பாடசாலைகளின் விபரம்** | |
| 23. | ஹுசைனியாபுரம் அ.மு.வி. ஹுசைனியாபுரம் (உலுக்காப்பள்ளம்) பாலாவி. | 6 |
| 24. | எருக்கலம்பிட்டி அ.மு.ம.வி. எருக்கலம்பிட்டி (நாகவில்லுச் சந்தி) பாலாவி. | 4 |
| 25. | வேப்பமடு அ.மு.வி., புத்தளம். | 1 |
| | **மொத்தம்** | 34 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதை, மின்சாரம், குடிநீர், நீர்ப்பாசனம் பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநலத் திட்டங்கள் (1998)**

1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 1998ம் ஆண்டுவரை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் பாதை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, நீர்பாசன திட்டம், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் - அறுநூற்றி இருபத்தியொரு லட்சத்தி அறுபத்தி ஒன்பதாயிரம் ரூபா (62,169,000/-) செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | மில்லியன் ரூபா |
|---|---|
| 1994 (ஆகஸ்ட் - டிசம்பர்) | 0.43 |
| 1995 | 6.96 |
| 1996 | 15.339 |
| 1997 | 11.291 |
| 1998 | 28.149 |
| மொத்தம் | 62.169 |

**பாதை, மின்சாரம், குடிநீர், நீர்ப்பாசனம் பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநலத் திட்டங்கள் (1999)**

1999ம் ஆண்டு மாத்திரம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் பாதை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, நீர்பாசன திட்டம், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் - நானூற்றி எழுபத்தி ஐந்து லட்சத்தி இருபத்தி ஏழாயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

| திட்டங்கள் | (மில்லியன் ரூபா) |
|---|---|
| பாதைகள் | 9.467 |
| பாடசாலைகள் | 21.621 |
| பள்ளிவாசல்கள் | 4.512 |
| பிற சமூகநலத் திட்டங்கள் | 7.061 |
| நீர்பாசனம் | 3.891 |
| நீர் வினியோகம் | .975 |
| மொத்தம் | 47.527 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994 ஆகஸ்ட் தொடக்கம் 1999ம் ஆண்டு இறுதிவரை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் பாதை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, நீர்பாசன திட்டம், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் - ஆயிரத்தி தொண்ணூற்றியாறு இலட்சத்தி தொண்ணூற்றியாறாயிரம் ரூபா **(109,696,000/-)** மொத்தமாக செலவிடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்திலும் ஏனைய பிற மாவட்டங்களிலும் இடம் பெயர்ந்து வந்த முஸ்லிம் மக்களை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயல் திட்டங்களால் இடம் பெயர்ந்த மக்கள் மட்டும் அல்லாது நிரந்தர குடியிருப்பாளர்களும் அதிக பயனடைந்து உள்ளமை இங்கு விசேடமாக சுட்டிக்காட்டப்படவேண்டிய மிக முக்கிய அம்சமாகும்.

## அரச ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு

அரச ஊழியர்களாக சேவையாற்றி வடக்கிலிருந்து துரத்தியடிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்படும் போது வடக்கிலிருந்து துரத்தப்பட்டு வந்த இம் முஸ்லிம் அரச ஊழியர்களிடம் எவ்விதமான தஸ்தாவேஜுகளோ, ஆதாரங்களோ இருக்கவில்லை. ஆனால் கௌரவ அமைச்சரின் விஷேட அக்கறையின் பேரிலும் தீவிர செயற்பாட்டின் காரணமாகவும் அமைச்சரவை தீர்மானத்திற்கமைய மொத்த இழப்பில் ஐம்பது வீதத்தினை நஷ்டஈடாகப் பெற்றுக்கொள்ள ஆவண செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் இப்படியான ஒரு முடிவினை எடுக்காது இருந்தால் இன்னும் இவர்களுக்கான நட்டஈடு என்பது ஒரு பகற் கனவாகிப் போயிருக்கும்.

| மாவட்டம் | அரச ஊழியர் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>மன்னார்<br>முல்லைத்தீவு | 249<br>610<br>19 |

## திருமண உதவிக் கொடுப்பனவு

நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்வோருக்கான திருமணக் கொடுப்பனவாக சுயதொழில் உதவி நோக்கில் தலா 25,000 ரூபா வழங்கப்பட்டுள்ளன.

| மாவட்டம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| புத்தளம்<br>அனுராதபுரம்<br>குருநாகல் | 802<br>169<br>23 |

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருக்கும் கௌரவ அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் மிகவும் தீர்க்கதரிசனத்துடனும் துணிவுடனும் இம் மக்களின்பால் கொண்ட அதீத நேசத்தின் காரணமாகவும் குறிப்பிட்ட நான்கு ஆண்டுகளுக்குள் இம் மக்களின் வாழ்வில் கவிந்திருந்த பல அடிப்படை இருள்களை அகற்றி ஒளியேற்றி வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. இருந்தும் அவர்கள் இந்த மக்களின் சுபிட்சத்திற்கும் வாழ்வுக்கும் எதையுமே செய்ய முன்வரவில்லை. ஆனால் மேண்மைதகுசந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பொது ஜன ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணி அரசாங்கமும் அதன் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான கௌரவ எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும் அகதிகளின் கண்ணீரைத் துடைத்து சமூக அந்தஸ்த்துள்ள பிரஜைகளாக அவர்களை சமத்துவத்துடன் வாழும் வாழ் நிலைக்கு உயர்த்தியதன் ஊடாக தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இப் பணிக்காகவேண்டி

| | | |
|---|---|---|
| மீள்குடியேற்றத்திற்கு | - | **90,880,000**/= ரூபாவும் |
| மாதிரிக் கிராமத்திற்கு | - | **11,627,433**/= ரூபாவும் |
| பாடசாலை, பாடசாலைக் கட்டிடங்கள், தளபாட வசதிகளுக்காக | - | **37,000,000**/= ரூபாவும் |
| பாதை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, நீர்பாசன திட்டம், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பிற சமூகநல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | - | **109,696,000**/= |


ரூபாவுமாக (அரச ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு, சுயதொழில் திருமண உதவிக் கொடுப்பனவு, மாணவர்களுக்கான புலமைப் பரிசில் சகாய நிதி கொடுப்பனவு நீங்கலாக) மொத்தமாக இரண்டாயிரத்தி நானூற்றி தொண்ணூற்றியிரண்டு இலட்சத்தி மூவாயிரத்தி நானூற்றி முப்பத்திமூன்று ரூபாய்க்களை **(249,203,433/=)** பொது ஜன முன்னணி அரசின் அனுசரணையுடன் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு செலவிட்டுள்ளது. இலங்கை மாதா பெற்றெடுத்த மக்கள் என்ற வகையில் அரசாங்கம் அதனுடைய கடமையை செவ்வனே செய்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org